**THE GANDHIGRAM RURAL INSTITUTE**
**(Deemed to be University)**
**GANDHIGRAM -624 302, DINDIGUL DISTRICT - TAMILNADU**
(Ministry of Education, Govt. of India)
Accredited by NAAC with 'A' Grade (3rd Cycle)

*All communication should be addressed to the Registrar by designation and not by name*

EPABX No : (0451) 2452371-2452376
Phone : (0451) 2452323
Fax : (0451) 2454466
E.mail : grucc@ruraluniv.ac.in
Website : www.ruraluniv.ac.in

**Dr.L.RATHAKRISHNAN**
Registrar i/c

Ref: Res.Cell/Ph.D Sch./S1/2024-25 28.01.2025

# CIRCULAR

Sub: GRI (DTBU) – Fresh Scholarship for Ph.D. Full-time Research Scholars (SC,ST&SCC) for the year – 2024-25 – reg.

Ref: Tamil Nadu Government notification for Adi Dravidar and Tribal Welfare Department dated. 03.01.2025 through online.

*****

With reference to the notification issued by the Department of Adi-Dravidar and Tribal Welfare Board, Government of Tamil Nadu, a fresh scholarship has been announced for the year 2024-25 for the Ph.D. Full-time Research Scholars of SC, ST and SCC Candidates who belongs to the State of Tamilnadu. Accordingly, the eligible scholars are hereby informed to apply the Scholarship in the prescribed format, which is available on the web portal:

https://cms.tn.gov.in/cms_migrated/document/forms/PhD_application_fresh_form_2024_2025.pdf.

The Scholarship amount will be remitted directly to the students' Bank Account.

It is also formed that a filled application form in prescribed format may be sent to the following address **on or before 28.02.2025.**

The Director,
Adi-Dravidar Welfare Department,
Ezhilagam link building,
Cheppakam, Chennai – 600 005

REGISTRAR i/c

To

1. All the Deans/HODs/Directors/Co-ordinators/Research Supervisors/Dean, Students' Welfare/ All Notice Boards.
2. The Director, Computer Centre: - to display in the GRI website under "Students corner", Intranet & Reservation Cell portal.

Cc: PS to VC/PS to Registrar/Finance Section/Academic Section/File.

Encl: Notification received from the Adi Dravidar and Tribal Welfare Office, Chennai.

***Note:*** ***Scholars/Students can apply for all available scholarship schemes provided by the State/Central Government & Others, but he/she can claim/avail any one of the highest amount of scholarship other awarded amount has to be refunded to the concern sanctioned authorities.***

29/1/25

RESERVATION CELL
Section S1 Date 27/1/25

# தமிழ்நாடு அரசு

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## எழிலகம் (இணைப்பு), சேப்பாக்கம், சென்னை - 600 005.

அரசாணை(நிலை) எண்:72 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3)துறை நாள் 16.09.2024 இன்படி முழுநேர முனைவர் பட்டப் படிப்பு மேற்கொள்ளும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இன மாணவர்களுக்கு ஆண்டுக்கு தலா ரூ.1,00,000/- வீதம் 2000 மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் என அரசு ஆணையிட்டுள்ளது. எனவே கீழ்க்கண்ட விதிமுறைகளுக்குட்பட்டு 2024-2025-ஆம் கல்வியாண்டிற்கு ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த முழுநேர முனைவர் பட்டப்படிப்பு (Ph.D) பயிலும் புதிய (Fresh) மாணாக்கர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1) தமிழ்நாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் முழுநேர முனைவர் பட்டப்படிப்பு (Ph.D.,) மேற்கொள்ளும் தமிழ்நாட்டைச் சார்ந்த ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இன மாணாக்கர்கள் மட்டும் விண்ணப்பிக்க தகுதி பெற்றவர். பகுதி நேர ஆராய்ச்சி மாணவர்கள் பயன்பெற இயலாது.

2) இத்திட்டத்தின்கீழ் பயனடைய நிர்ணயிக்கப்பட்டுள்ள குடும்ப ஆண்டு வருமான வரம்பான ரூ.8.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

3) இத்திட்டத்தின் கீழ் கல்வி ஊக்கத் தொகை வேண்டி விண்ணப்பிக்க முதுகலைப் பட்டப் படிப்பில் 55% விழுக்காடு பெற்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

4) வயது வரம்பு ஆண்களுக்கு 50 மிகாமலும் மற்றும் பெண்களுக்கு 55 மிகாமலும் இருக்க வேண்டும்.

5) அரசாணை(நிலை) எண்:72 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3)துறை நாள் 16.09.2024 இன்படி முனைவர் ஆராய்ச்சி பட்டப்படிப்பு மேற்கொள்ளும் மாணாக்கருக்கு பல்கலைக் கழகத்தால் அனுமதிக்கப்பட்ட படிப்புப்பிரிவு கால அளவிற்குள் அல்லது அதிகப்பட்சமாக ஐந்தாண்டுகளுக்கு மட்டும் (Prescribed Duration of Course or Maximum 5 years) ஊக்கத் தொகை வழங்கப்படும்.

6) விண்ணப்பத்துடன் சாதிச்சான்று, வருமானச் சான்று, கல்விச் சான்று, ஆதார் விவரம் மற்றும் முனைவர் பட்டப்படிப்பிற்கான நுழைவு சான்று ஆகிய சான்றிதழ்களை இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

7) புதுப்பித்தல் மாணாக்கர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்ட பின் மீதமுள்ள காலி இடங்களில் தகுதிபெறும் புதிய மாணாக்கர்களைக் கீழ்காணும் பாடப்பிரிவின் இடஒதுக்கீட்டிற்கு ஏற்றவாறு கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படும்.

| வ.எண் | பாடப்பிரிவுகள் | இடஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | கலை (Linguistics) | 10% |
| | கலை (Education, Commerce, Management, Architecture, Mass Communication, Design) | 20% |
| 2. | அறிவியல் ( Pure Science) | 20% |
| | பயன்பாட்டு அறிவியல் (Applied Science, Medical, Engineering) | 40% |
| 3. | களம் 1 மற்றும் 2இல் இடம் பெறாத பாடப்பிரிவுகள் | 10% |

8) மேற்கண்ட பிரிவுகளில் பெறப்படும் விண்ணப்பங்களில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் கூடுதலாகவும், குறைவாகவும் அல்லது விண்ணப்பங்கள் பெறப்படாத நிலையில் அதனை அதிக விண்ணப்பங்கள் வரப்பெற்ற மற்ற பாடப்பிரிவுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

9) ஒரு பாடப்பிரிவில் அதிக விண்ணப்பங்கள் பெறப்படும் பட்சத்தில், உலகளாவிய அளவில் QS தர எண் பெற்ற கல்வி நிறுவனங்கள், University Grants Commission (UGC), National Institutional Ranking Framework (NIRF) ஆகிய நிறுவனங்களின் தரவரிசையில் இடம்பெற்றுள்ள பல்கலைக்கழகங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

10) அறிவியல் சார்ந்த பாடப்பிரிவுகளில், அறிவியல் முன்னேற்றம் (Advance Science), மருத்துவம் (Medical) மற்றும் தொழில்நுட்பம் (Technology) போன்ற பாடப்பிரிவுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

11) இத்திட்டத்தின் கீழ் தகுதி பெறும் மாணாக்கரில் பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

12) பல்கலைக் கழகம் / கல்லூரிகளில் ஊக்கத்தொகை / ஊதியத்துடன் கூடிய படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படாது.

13) மதிப்பெண் அடிப்படையில் பயனாளிகளைத் தேர்வு செய்யும் போது, ஒரு இடத்திற்கு இரண்டுக்கும் மேற்பட்டோர் ஒரே விழுக்காடு மதிப்பெண் பெற்றிருப்பாராயின், மாணாக்கர்களின் வயதின் அடிப்படையில் வயதில் மூத்தோருக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படும்.

14) கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் (ஊதியமில்லா விடுப்பில் இருந்தாலும் கூட) ஊக்கத்தொகை பெற தகுதியற்றவராவர்.

15) தவறான தகவல்களுடன் விண்ணப்பித்து கல்வி ஊக்கத்தொகை பெற்ற மாணாக்கர்கள் இத்திட்டத்தின் கீழ் நீக்கப்படுவர். மேலும் அவர்களுக்கு வழங்கப்பட்ட கல்வி ஊக்கத்தொகை அரசுக்கு திரும்ப செலுத்த வேண்டுமே.

16) மாணவரின் ஆராய்ச்சி திருப்திகரமாக இல்லை என தெரிய வந்தால், அம்மாணாக்கருக்கு கல்வி ஊக்கத்தொகை நிறுத்தப்படும்.

17) ஓர் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க தவறிய மாணாக்கர்கள் அடுத்த ஆண்டு மட்டுமே விண்ணப்பிக்க இயலும்.

18) 2024-2025 ஆம் ஆண்டு கல்வி ஊக்கத் தொகை பெற மாணாக்கர்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பத்தினை மட்டுமே பயன்படுத்த வேண்டும். முந்தைய ஆண்டு விண்ணப்பங்கள் மூலம் கல்வி ஊக்கத் தொகை பெற மாணாக்கர்கள் விண்ணப்பித்திருப்பின் கல்வி ஊக்கத் தொகை வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

19) கல்வி நிறுவன முதல்வரது கையொப்பம் மற்றும் பல்கலைக்கழக பதிவாளரின் பரிந்துரையுடன் விண்ணப்பம் வரப்பெற வேண்டும். தவறும் பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

20) மேற்கண்ட தகவல்களை மாணவர்கள் அறியும் வண்ணம் தகவல் பலகையில் ஒட்டியும், சம்பந்தப்பட்ட கல்லூரிகளுக்கு தகவல் தெரிவித்து மாணவர்களை விண்ணப்பிக்கவும் அறிவுறுத்தப்படுகிறது

21) விண்ணப்ப படிவத்தில் எவ்வித கலமும் விடுபடாமல், முழுமையாக பூர்த்தி செய்து இவ்வலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் 28.02.2025 அன்று மாலை 5.45 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

22) 28.02..2025-க்கு பிறகும், விளம்பரம் வெளியிடுவதற்கு முன்னர், பெற்ற விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்கள் எனில் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி, ஆணையர், ஆதிதிராவிடர் நலத ஆணையரகம், எழிலகம்(இணைப்பு), சேப்பாக்கம், சென்னை - 600005.

## இணைப்பு

## 2024-2025 ஆம் ஆண்டில் முழுநேர முனைவர் பட்டப் படிப்புப் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இன மாணாக்கர்களுக்கு ஊக்கத் தொகை பெறுவதற்கான (Fresh Students only) படிவம்.

(தகுதியுள்ளதை டிக் செய்யவும்)

கடவுச் சீட்டு அளவு புகைப்படம் ஒட்டப்பட வேண்டும். (முதல்வர் சான்றொப்பத்துடன்)

| | | | |
|---|---|---|---|
| 1 | மாணவர் பெயர் | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| 2 | பாலினம்<br>✓ செய்யவும் | ஆண் ☐ பெண் ☐<br>மூன்றாம் பாலினத்தார் ☐ | |
| 3 | பிறந்த தேதி | நாள் / மாதம் / வருடம் / வயது | |
| 4 | இனம்<br>✓ செய்யவும் | ஆதிதிராவிடர் (SC) ☐<br>பழங்குடியினர் (ST) ☐<br>மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் (SCC) ☐ | |
| | சாதி உட்பிரிவின் பெயர் | | |
| | சாதிச்சான்றிதழ் எண் | | |
| 5 | நீங்கள் மாற்றுத் திறனாளியா?<br>( ✓ செய்யவும் )<br>ஆம் எனில் அதற்கான சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும். | ஆம் ☐ இல்லை ☐ | |
| 6 | பெற்றோர் பெயர் | தந்தை | |
| | | தாய் | |
| | பாதுகாவலர் பெயர் | | |

| | | |
|---|---|---|
| 7 | நிரந்தர முகவரி | |
| | கதவு எண் மற்றும் தெருவின் பெயர் | |
| | கிராமம்/ நகரப் பெயர் | |
| | வட்டப்பெயர் | |
| | மாவட்டப்பெயர் | |
| | அஞ்சல் குறியீட்டு எண் | |
| | செல்பேசி எண் | |
| | மின்னஞ்சல் முகவரி | |
| | ஆதார் எண். | |
| 8 | தற்போதைய முகவரி அஞ்சல் குறியீட்டுடன் | |
| 9 | குடும்ப ஆண்டு வருமானம் | |
| | வருமானச் சான்றிதழ் எண் | |
| | அனைத்து குடும்ப உறுப்பினர்களின் பெயர்களும் வருமானச் சான்றிதழில் இடம் பெற்றிருக்க வேண்டும். திருமணமான பெண்கள் கணவரின் பெயரில் சான்றிதழ் பெறறப்பட வேண்டும்) | |
| 10 | முனைவர் பட்டம் கல்வி பயில எக்கல்வி தகுதியினை அடிப்படையாகக் கொண்டு சேர்க்கை பெற்றுள்ளீர் ( ✓ செய்யவும்) | முதுகலை (PG) ☐<br>ஆய்வியல் நிறைஞர் (M.Phil.,) ☐ |
| 11 | முதுகலைப் பட்டம்<br>( M.Sc / M.A / ME/ MLIS., etc) | |
| 12 | பாடப்பிரிவு<br>( Tamil / Engilsh / chemistry,etc.,) | |
| 13 | முதுகலைப் பட்டப் படிப்பில் பெற்ற தேர்ச்சி விழுக்காடு<br>(துல்லியமாக குறிப்பிடப்பட வேண்டும்) | % |

| | | |
|---|---|---|
| 14 | ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பில் பயின்ற பாடம் (M.Phil.,) | |
| 15 | பாடப்பிரிவு<br>( Tamil / Engilsh / chemistry,etc.,) | |
| 16 | ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பில் பெற்ற தேர்ச்சி விழுக்காடு<br>(துல்லியமாக குறிப்பிடப்பட வேண்டும்) | % |
| 17 | தற்போது முனைவர் பட்டம் பயிலும் கல்வியாண்டு (2024-2025)<br>( ✓ செய்யவும் ) | முதலாம் ஆண்டு ☐<br>இரண்டாம் ஆண்டு ☐<br>மூன்றாம் ஆண்டு ☐<br>நான்காம் ஆண்டு ☐<br>ஐந்தாம் ஆண்டு ☐ |
| 18 | முனைவர் பட்டப் படிப்பு மேற்கொள்ளும் கல்வி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | |
| 19 | முனைவர் பட்டப் படிப்புக்கு அங்கீகாரம் வழங்கும் பல்கலைக் கழகத்தின் பெயர் மற்றும் முகவரி | |
| 20 | முனைவர் பட்டப் படிப்புப் பயில பல்கலைக் கழகத்தால் ஆராய்ச்சிக் காலம் குறிப்பிடப்பட்ட அனுமதிக் கடிதத்தில் உள்ள பல்கலைக் கழகப் பதிவு எண் (Ph..D., Registration Number) | |
| | எக்காரணத்தைக் கொண்டும் Bonafide Certificate ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. | |
| 21 | மாணவரது சேமிப்புக் கணக்கு விவரம் (மாணவரின் வங்கி சேமிப்பு கணக்கு எண் விவரம் | |
| | அ) சேமிப்புக் கணக்கு எண் | |
| | ஆ) வங்கி மற்றும் கிளையின் பெயர் | |
| | இ) IFSC குறியீட்டு எண் | |
| | ஈ) MICR குறியீட்டு எண் | |

## பிற்சேர்க்கை (Annexure - I)

(இணைக்கப்பட வேண்டிய ஆவணங்களின் இனங்களுக்கு எதிரே உள்ள கட்டத்தில் ✓ டிக் செய்யவும்)

1. சாதிச்சான்று நகல் ☐
2. வருமானச் சான்றிதழ் நகல் ☐
3. ஆதார் நகல் ☐
4. மாற்றுத் திறனாளி எனில் அதற்கான சான்றிதழ் நகல் ☐
5. முனைவர் பட்டப் படிப்பிற்கான நுழைவுச் சான்றிதழ் (Registration Certificate) ☐
6. முதுகலைப் பட்டப் படிப்பு ஒருங்கிணைந்த மதிப்பெண் (Overall Mark sheet) சான்றிதழ் ☐
7. ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பு ஒருங்கிணைந்த மதிப்பெண் (Overall Mark sheet) சான்றிதழ் ☐
8. வங்கி கணக்கு புத்தக நகல் ☐

### சான்று

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதியளிக்கிறேன். என்னால் அளிக்கப்பட்ட மேற்கண்ட விவரங்கள் பின்னாளில் தவறு என கண்டறியப்பட்டாலும், எனது ஆராய்ச்சி திருப்திகரமாக இலலை என தெரிய வந்தாலும் எனக்கு ஒப்பளிக்கப்படும் கல்வி ஊக்கத் தொகை முழுவதையும் அரசுக்கு எவ்வழியிலும் திருப்பிச் செலுத்திட உறுதியளிக்கிறேன். மேலும் முனைவர் ஆராய்ச்சி பட்டப் படிப்பை முடிக்கும் பொழுது அதற்கான அறிக்கையினை அரசுக்கு அனுப்பிடுவேன் எனவும் உறுதியளிக்கிறேன்.

முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும் ஏற்கிறேன்.

நாள்: மாணவரது கையொப்பம்

நாள்: வழிகாட்டியின் கையொப்பம்

கல்வி நிலையத் தலைவரால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது

## TO BE FILLED BY THE HEAD OF THE INSTITUTION

| | | |
|---|---|---|
| 1 | கல்லூரியின் வகைப்பாடு<br>( ✓ செய்யவும் ) | மத்திய அரசு கல்லூரி ☐<br>மாநில அரசு கல்லூரி ☐<br>அரசு உதவி பெறும் கல்லூரி ☐<br>சுயநிதி கல்லூரி ☐<br>தன்னாட்சி கல்லூரி ☐<br>நிகர்நிலைப் பல்கலைக்கழகம் ☐ |
| 2. | கல்வி நிலையத்தின் பெயர் மற்றும் முழுமையான முகவரி | |
| 3 | கல்லூரியின் (College) தொலைபேசி எண். | |
| | Nodal Officer கைபேசி எண். | |
| | மின்னஞ்சல் முகவரி | |
| 4 | பல்கலைக் கழக (University) தொலைபேசி எண். | |
| | Nodal Officer கைபேசி எண். | |
| | மின்னஞ்சல் முகவரி | |
| 5 | மாணாக்கரின் பெயர் | |
| | Ph..D., Registration Number | |
| 6 | மாணவரது குடும்ப ஆண்டு வருமானம் | |
| 7 | முனைவர் பட்டம் கல்வி பயில எக்கல்வி தகுதியினை அடிப்படையாகக் கொண்டு சேர்க்கை பெற்றுள்ளீர் ( ✓ செய்யவும்) | முதுகலை (PG) ☐<br>ஆய்வியல் நிறைஞர் (M.Phil.,) ☐ |
| 8 | மாணவரின் முதுகலைப் பட்டப் (PG)படிப்பில் தேர்ச்சி விழுக்காடு (துல்லியமாக குறிப்பிடப்பட வேண்டும்) | |

| | | |
|---|---|---|
| 9 | மாணவரின் ஆய்வியல் நிறைஞர் (M.Phil.,) பட்டப் படிப்பில் தேர்ச்சி விழுக்காடு (துல்லியமாக குறிப்பிடப்பட வேண்டும்) | |
| 10 | மாணாக்கர் கல்வி பயிலும் முறை<br>✓ செய்யவும் | முழுநேரம் ☐<br>பகுதி நேரம் ☐ |
| 11 | மாணவர் முனைவர் பட்டப் படிப்பு பயிலும் பாடப்பிரிவு(Subject) | |
| | மாணவர் முனைவர் பட்டப் படிப்பு பயில தேர்வு செய்துள்ள ஆராய்ச்சியின் தலைப்பு (Title) (Black Letters) | |
| 12 | மாணாக்கருக்கு முனைவர் பட்டப் படிப்பு பயில பல்கலைக் கழகம் அனுமதித்துள்ள அதிகபட்ச மொத்த கால அளவு | இரண்டாண்டு ☐<br>மூன்றாண்டு ☐<br>நான்காண்டு ☐<br>ஐந்தாண்டு ☐ |
| 13 | தற்போது (2024-2025) முனைவர் பட்டம் பயிலும் ஆண்டு<br>( ✓ செய்யவும் ) | முதலாம் ஆண்டு ☐<br>இரண்டாம் ஆண்டு ☐<br>மூன்றாம் ஆண்டு ☐<br>நான்காம் ஆண்டு ☐<br>ஐந்தாம் ஆண்டு ☐ |
| 14 | கல்வி கால அளவு தொடங்கிய நாள்<br>(பல்கலைக்கழக அனுமதிக் கடிதத்தில் உள்ளவாறு) | நாள் \| மாதம் \| வருடம் |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | கால அளவு முடியும் நாள் | நாள் | | மாதம் | | வருடம் | | | |
| | (பல்கலைக் கழக அனுமதிக் கடிதத்தில் உள்ளவாறு) | | | | | | | | |

**கல்வி நிறுவனத் தலைவர் மற்றும் பல்கலைக்கழக பதிவாளரின் பரிந்துரைக்கும் சான்று**

மாணவர் சார்பாக மேலே பூர்த்தி செய்யப்பட்ட விவரங்கள் அனைத்தும் சரியானவை என்று உறுதி கூறுகிறேன். மேலும் மாணவருக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்க பரிந்துரை செய்கிறேன்.

பல்கலைக்கழக பதிவாளர் அவர்களின்
பெயர் மற்றும் கையொப்பம்
பல்கலைக் கழக முத்திரை.

நாள் :
இடம் :